NOT FOR COMMERCIAL PURPOSE

# الأصول الثلاثة

# மூன்று அடிப்படைகள்

ஒவ்வொரு முஸ்லிமும் அவசியம் அறிந்து, நம்பிக்கை கொண்டு, வாழ்வில் பின்பற்றவேண்டிய மூன்று அடிப்படைகளை குர்ஆன் சுன்னாவின் வெளிச்சத்தில் தெளிவுபடுத்தும் நூல்.

ஆசிரியர்:

**இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப்**

ரஹ்மத்துல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 1115-1206)

தமிழில்:

**உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ்ஸலாம்**

إن هدى الله هو الهدى
دار الهدى
DARUL HUDA
அல்லாஹ்வின் நேர்வழியே உண்மையான நேர்வழி

# பொருளடக்கம்

ஆசிரியர் அறிமுகம் - 4

பதிப்புரை - 6

தாருல் ஹுதா ஓர் அறிமுகம் - 8

வெற்றிக்குரிய நான்கு அம்சங்கள் - 12

அறிந்து செயல்படுத்த வேண்டிய மூன்று விசயங்கள் - 14

நபி இப்றாஹீம் உடைய மார்க்கம் - 18

மூன்று அடிப்படைகள் - 20

முதல் அடிப்படை - 21

ரப்பு - 24

வணக்க வழிபாடுகள் - 26

இரண்டாம் அடிப்படை - 34

ஈமான் - 40

இஹ்சான் - 45

மூன்றாவது அடிப்படை - 49

நபி ﷺ மதீனாவில் - 53

இறைத்தூதர்கள் - 57

# ஆசிரியர் அறிமுகம்

இமாம் அவர்களின் பெயர், ஷைகுல் இஸ்லாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் இப்னு சுலைமான் இப்னு அலீ இப்னு முஹம்மது இப்னு அஹ்மது இப்னு ராஷிது இப்னு பரீது இப்னு முஹம்மது முஷ்ரிஃப் இப்னு உமர். இவர் தமீம் வமிசத்தைச் சேர்ந்தவர்.

நஜ்து மாகாணத்தில் உயைனா எனும் ஊரில் ஹிஜ்ரீ 1115 ஆம் ஆண்டு பிறந்தார்.

பத்து வயதை அடைவதற்கு முன்பே குர்ஆனை மனனம் செய்து, பின்னர் மார்க்கக் கல்விகளைத் திறம்படக் கற்றார்.

ஹிஜ்ரீ 1153 ஆம் ஆண்டிலிருந்து பகிரங்கமாக ஏகத்துவ அழைப்பை விடுத்தார். அனாசாரங்களையும் கப்ரு வழிபாடுகளையும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார்.

இவரின் முயற்சிக்கு அல்லாஹ் வெற்றியை வழங்கினான். கப்ருகளை வணங்கிவந்த பலர், வணக்க வழிபாடுகளை அல்லாஹ்விற்கு மட்டும் தூய்மைப்படுத்தினார்கள். அனாசாரங்களை விட்டு நபிவழிக்குத் திரும்பினார்கள்.

இமாம் அவர்கள் தங்களின் வாழ்க்கையை முழுமையாக மார்க்கப் பணிக்கே அர்ப்பணித்தார்கள். பல எதிர்ப்புகளைச் சந்தித்தார்கள். இறுதியில் அவர்களின் உழைப்புக்கு அல்லாஹ் வெற்றியை அளித்தான். இன்று தூய இரு நகரங்களைத் தன்னில் கொண்ட ஏகத்துவ ஆட்சி நடை பெறுகின்ற சவூதி நாடு அவர்களின் அழைப்புப் பணிக்கு அல்லாஹ் கொடுத்த வெற்றியே ஆகும்.

அரும்பெரும் பல நூற்களை எழுதிய இமாம் அவர்கள் ஹிஜ்ரீ 1206 ஆம் ஆண்டு இறந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

- மொழிபெயர்ப்பாளர்.

# பதிப்புரை

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் நேர்வழி காட்டுபவன். அவன் அருளும் உதவியுமின்றி நன்மை எதையும் செய்ய முடியாது; பாவத்திலிருந்து தப்பிக்க முடியாது, அவன்தான் இறைவன்; வணங்குவதற்குத் தகுதியானவன்; அவனுக்கு இணை, துணை இல்லை. முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்று சாட்சி கூறுகிறோம்.

இதற்கு முன் பல நூற்களை வெளியிட அல்லாஹ் அருள் புரிந்தது போல் இந்நூலை வெளியிடவும் அவன் அருள் புரிந்துள்ளான். எல்லா முஸ்லிம்களும் கற்றுச் செயல்பட வேண்டிய பல அரிய விசயங்கள் இதில் உள்ளன.

கல்வி கற்கின்ற மாணவர்கள், புதிதாக இஸ்லாமை ஏற்றுக் கொண்டவர்கள் மற்றும் இஸ்லாமிய அடிப்படையை அறிய விரும்புபவர்கள் என அனைவருக்கும் இந்நூல் மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது.

இமாம் அவர்கள் ஆழ்ந்த கல்வி ஞானம் உள்ளவர்களாக இருந்ததால் மார்க்க அடிப்படைகளை மிகத் துல்லியமாக இந்நூலில் விவரித்துள்ளார்கள். இதைத் தொடர்ந்து அவர்களின் அனைத்து நூற்களையும் தமிழில் கொண்டு வருகிற முயற்சியில் நாங்கள் இருக்கிறோம். அல்லாஹ்தான் அதற்கு உதவவேண்டும். எங்கள் பணியை எளிதாக்கித் தர வேண்டும்.

கல்வி ஆழமற்ற ஆலிம்களின் தவறான பிரச்சாரத்தால் பலர் இமாம் அவர்களைப் பற்றி தவறாகப் புரிந்து

*வைத்துள்ளார்கள். அத்தகையவர்களும் இந்நூலைப் படிக்கும்போது தங்களின் தவறான எண்ணத்தைத் திருத்திக்கொள்ள நிச்சயம் வாய்ப்புண்டு.*

*இந்த வெளியீட்டில் பிழைகளைக் காண்போர் அவற்றை அவசியம் எங்களுக்கு சுட்டிக் காண்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*அல்லாஹ்வே எங்களிடமிருந்து இதை ஏற்றுக்கொள்! எங்கள் பாவங்களை மன்னித்துவிடு! நீயே மகா கருணையாளன்!*

**உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ்ஸலாம்**
*அல்குர்ஆன் மற்றும் நபிமொழிப் பணியாளன்*
*தாருல் ஹுதா, சென்னை-1.*

# தாருல் ஹுதா
## ஓர் அறிமுகம்

*எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாவதாக!*

*இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!*

*அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு*

*தாருல் ஹுதாவை அறிமுகம் செய்வதன் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக்கம் மற்றும் அதன் பணிகளை விவரிப்பதுடன் அதன் இன்றையத் தேவைகளையும் தங்கள் முன் வைக்கிறோம்.*

### தாருல் ஹுதாவின் உதயம்

*அல்லாஹு தஆலா கூறுகிறான்:*

*அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட ஆண்களும், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைத் தவறாமல் கடைப்பிடித்து, ஸகாத் கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கீழ்ப்படிந்து நடப்பார்கள். இவர்களுக்கு அதிவிரைவில் அல்லாஹ் அருள்புரிவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனும், ஞானமுள்ளவனும் ஆவான். (அல்குர்ஆன் 9 : 71)*

*(முஸ்லிம்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார், (மனிதர்களை இஸ்லாம் எனும்) சிறந்ததின் பக்கம் அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான செயல்களிலிருந்து (அவர்களைத்) தடுத்துக்கொண்டும் இருக்க வேண்டும். இவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள். (அல்குர்ஆன் 3 : 104)*

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் ஒரு தவறைக் கண்டால் அதைத் தமது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தம் நாவால் மாற்றட்டும். அதுவும்*

*இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் (நம்பிக்கையின்) குறைந்தபட்ச அளவாகும்.*

*(ஸஹீஹ் முஸ்லிம்)*

*மேலும் கூறினார்கள்: நம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசம் கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஒரே ஓர் உடலைப்போல! உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால் அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் வேதனைப்படுகின்றன. (ஸஹீஹுல் புகாரி)*

*இன்றைய சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர்வரை பெரும் பாலோருக்கு சரியான மார்க்க அறிவும் முறையான வழிகாட்டலும் அதிகம் தேவை என்பது நாம் அறிந்ததே. ஆகவே, மேற்கூறப்பட்ட இறைவசனங்கள் மற்றும் நபிமொழிகளுக்கிணங்க சமுதாயச் சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல்குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறைவேற்றி இறைதிருப்தியை அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் தாருல் ஹுதா.*

## தாருல் ஹுதாவின் பணிகள்

### *அழைத்தல்:*

*இது இஸ்லாமின் முதல் பணியாகும். உலகில் இப்பணியை இறைத் தூதர்கள் செய்தார்கள். இறுதி இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்குப் பின் அவர்களின் சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்புமிகு நபிமொழியும் இதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. எனவே, இயன்ற அளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும் அதன் உயர்வுகளை விளக்கிச் சொல்லி அதன் பக்கம் அழைப்பதும் தாருல் ஹுதாவின் முதல் பணியாகும்.*

### *கற்பித்தல்:*

*இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மைமிகு குர்ஆன்,*

*சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக்கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது பணியாகும்.*

## நூல் வெளியிடுதல்:

*மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூற்களைத் தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்நூற்களைச் சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது பணியாகும்.*

## உதவுதல்:

*அல்லாஹ்வே அனைவரின் தேவைகள் மற்றும் துன்பங்களை நிவர்த்தி செய்பவன். மிகப் பெரிய வள்ளலாகிய அல்லாஹ் உலகில் ஏழை, எளியோர், நலிந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருலகிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்றவரை உதவுவது முஸ்லிம்களின் அடிப்படைப் பண்புகளாகும்.*

*இந்த உன்னதப் பணிக்காக பைத்துல்மால் (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச் சிந்தனையும், மார்க்கப்பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப் பெற்று அவற்றைத் தேவையுள்ளவர்களுக்கு வழங்குதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.*

*இந்தப் பணிகள் மட்டுமின்றி, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனித சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூகப் புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை அல்லாஹ்வுக்காகத் தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் முழு குறிக்கோளாகும்.*

*இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும், தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன்,*

தங்களால் இயன்றவரை இப்பணிகளில் பங்குபெறுமாறும் அழைக்கிறோம்.

மார்க்கத்திற்காகக் கொடுக்கப்படும் தர்மங்களுக்குச் சிறப்புகளும் நன்மைகளும் ஏராளம் உள்ளன.

ஆகவே, மறுமையின் வீட்டை நாடி, அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக முடிந்த உதவிகளைச் செய்யுங்கள்!

நீங்கள் உங்கள் ஆன்மாக்களுக்காக நன்மையில் எதை முற்படுத்திக் கொள்கிறீர்களோ, அதைத்தான் அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்ததாகவும், மகத்தான கூலியாகவும் பெற்றுக் கொள்வீர்கள்.

(அல்குர்ஆன் 73:20)

பேராற்றலுடைய அல்லாஹ் இந்த நல்ல திட்டங்களை நிறைவேற்றித்தர போதுமானவன்!

அவனிடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!

அன்புடன்,

**உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ்ஸலாம்**
அல்குர்ஆன் மற்றும் நபிமொழிப் பணியாளன்
தாருல் ஹுதா, சென்னை - 1

*அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன்*
*அல்லாஹ்வின் பெயரால்...*

# வெற்றிக்குரிய நான்கு அம்சங்கள்

*நான்கு அம்சங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.*

1. ***இல்மு :*** *அதாவது (அ) அல்லாஹ்வை அறிவது (ஆ) அவனுடைய தூதரை அறிவது (இ) இஸ்லாமிய மார்க்கத்தை அறிவது. இவை அனைத்தையும் ஆதாரத்துடன் அறிய வேண்டும்.*

2. ***அமல் :*** *அறிந்துகொண்ட விசயங்களின்படி செயல்பட வேண்டும்.*

3. ***தஅவா :*** *மக்களை இவற்றின் பக்கம் அழைக்க வேண்டும்.*

4) ***ஸப்ர் :*** *இவற்றைக் கடைப்பிடிக்கும் போது ஏற்படும் இன்னல்களைச் சகித்துக் கொள்ள வேண்டும்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 103:1-3*

وَالْعَصْرِ ۝١ إِنَّ الْإِنسَانَ لَفِي خُسْرٍ ۝٢ إِلَّا الَّذِينَ آمَنُوا
وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ۝٣

***காலத்தின் மீது சத்தியமாக! மனிதன் நிச்சயமாக நஷ்டமடைந்துவிட்டான். ஆயினும், எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, சகித்துக்***

**கொள்ளுமாறும் ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து வந்தார்களோ, அவர்களைத் தவிர.**

*இமாம் ஷாஃபிஈ[1] (ரஹ்) கூறுகிறார்கள்:*

*“அல்லாஹ் தன் படைப்பினத்திற்கு இந்த சூராவைத் தவிர வேறு ஆதாரத்தை இறக்கி வைக்கவில்லை என்றாலும் இதுவே போதுமானதாகும்.”*

*இமாம் புகாரீ[2] (ரஹ்) கூறுகிறார்கள் :*

*“சொல் மற்றும் செயலுக்கு முன் கல்வி கற்றுக்கொள்ள வேண்டும்.”*

***ஆதாரம்:** அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 47:19*

فَاعْلَمْ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّا اللّٰهُ

***(நபியே!) நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய வேறோர் இறைவன் இல்லை என்பதை நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.’’***

*சொல் மற்றும் செயலுக்கு முன் கல்வியையே அல்லாஹ் ஆரம்பமாகக் கூறி இருக்கிறான்.*

---

*1. இமாம் ஷாஃபிஈ : இவர் பெயர் முஹம்மது இப்னு இத்ரீஸ் இப்னு அப்பாஸ் இப்னு உஸ்மான் இப்னு ஷாஃபிஈ. இவர் ஹாஷிம் குடும்பத்தைச் சேர்ந்தவர். கஸ்ஸா நகரத்தில் ஹிஜ்ரீ 150 ஆம் ஆண்டு பிறந்து மிஸ்ர் நாட்டில் ஹிஜ்ரீ 204 ஆம் ஆண்டு இறந்தார்.*

*2. இமாம் புகாரீ : இவர் பெயர் முஹம்மது இப்னு இஸ்மாயீல் இப்னு இப்றாஹீம் இப்னு முஃகீரா. இவர் புகாரா நகரத்தில் ஷவ்வால் மாதம் ஹிஜ்ரீ 194 இல் பிறந்தார். பிறப்பதற்கு முன்பே தந்தையை இழந்து விட்டார். தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தார். ஸமர்கந்த் நகரத்திற்கு அருகிலுள்ள கர்தன்க் என்ற ஊரில் ஹிஜ்ரீ 256 இல் இறந்தார்.*

# அறிந்து செயல்படுத்த வேண்டிய மூன்று விசயங்கள்

முஸ்லிமான ஆண் பெண் அனைவரும் மூன்று அடிப்படை விசயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி நடக்க வேண்டும்.

**முதலாவது :**

- அல்லாஹ்தான் நம்மைப் படைத்தான்.
- அவனே நமக்கு உணவளிக்கின்றான்.
- அவன் நம்மை வீணாக விட்டுவிடவில்லை.
- மாறாக அவன் நமக்குத் தூதரை அனுப்பி இருக்கிறான்.
- அத்தூதரை ஏற்று அவரைப் பின்பற்றுபவர் சொர்க்கம் செல்வார்.
- அவரை ஏற்க மறுத்து மாறு செய்பவர் நரகத்தில் நுழைவார்.

**ஆதாரம்:** அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 73:15,16

إِنَّآ أَرْسَلْنَآ إِلَيْكُمْ رَسُولًا شَاهِدًا عَلَيْكُمْ كَمَآ أَرْسَلْنَآ
إِلَىٰ فِرْعَوْنَ رَسُولًا ﴿١٥﴾ فَعَصَىٰ فِرْعَوْنُ ٱلرَّسُولَ
فَأَخَذْنَٰهُ أَخْذًا وَبِيلًا ﴿١٦﴾

***(மனிதர்களே!) நிச்சயமாக நாம் உங்களிடம் (நமது) தூதர் ஒருவரை அனுப்பி வைத்தோம். (மறுமையில்) அவர் உங்களுக்குச் சாட்சியாக வருவார் இவ்வாறே ஃபிர்அவ்னிடமும் முன்னர் ஒரு தூதரை நாம் அனுப்பி வைத்தோம். எனினும், ஃபிர்அவ்ன் அத்தூதருக்கு மாறுசெய்தான். ஆகவே, நாம் அவனைப் பலமாகப் பிடித்துக் கொண்டோம்.***

***இரண்டாவது :***

*அல்லாஹ்விற்குச் செய்யவேண்டிய வழிபாட்டில் அவனுடன் வேறு எவரும் சேர்க்கப்படுவதை அவன் அறவே விரும்ப மாட்டான். அவர் வானவராகவோ இறைத்தூத ராகவோ இருந்தாலும் சரியே!*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 72:18*

وَّ اَنَّ الْمَسٰجِدَ لِلّٰهِ فَلَا تَدْعُوْا مَعَ اللّٰهِ اَحَدًا ﴿١٨﴾

***நிச்சயமாக பள்ளிவாசல் (மஸ்ஜிது)களெல்லாம், அல்லாஹ்வை வணங்குவதற்காக உள்ளன. ஆகவே, (அவற்றில்) அல்லாஹ்வுடன் மற்றெவரையும் (பெயர் கூறி) அழைக்காதீர்கள்.***

***மூன்றாவது :***

*அல்லாஹ்வை மட்டும் வணங்கி அவன் தூதருக்குக் கீழ்ப் படிந்து நடப்பவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் முரண்பட்டு நடப்பவருடன் நட்பு வைப்பதும் நேசம் கொள்வதும் கூடாது. அவர் நெருங்கிய உறவினராக இருப்பினும் சரியே.*

*ஆதாரம்: அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 58:22*

لَا تَجِدُ قَوْمًا يُّؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ يُوَآدُّوْنَ مَنْ
حَآدَّ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَلَوْ كَانُوْٓا اٰبَآءَهُمْ اَوْ اَبْنَآءَهُمْ اَوْ اِخْوَانَهُمْ
اَوْ عَشِيْرَتَهُمْ ؕ اُولٰٓئِكَ كَتَبَ فِيْ قُلُوْبِهِمُ الْاِيْمَانَ وَاَيَّدَهُمْ
بِرُوْحٍ مِّنْهُ ؕ وَيُدْخِلُهُمْ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ
فِيْهَا ؕ رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ ؕ اُولٰٓئِكَ حِزْبُ اللّٰهِ ؕ
اَلَآ اِنَّ حِزْبَ اللّٰهِ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۲۲﴾

*(நபியே!) எந்த மக்கள் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் (மெய்யாகவே) நம்பிக்கை கொண்டிருக்கிறார்களோ அவர்கள், அல்லாஹ்வுக்கும் அவன் தூத ருக்கும் மாறு செய்பவர்களை நேசிக்க மாட்டார்கள். அவர்கள், தங்கள் பெற்றோர்களாக, தங்கள் சந்ததிகளாக, தங்கள் சகோதரர்களாக, தங்கள் நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் சரியே. இவர்களின் உள்ளங்களில் அல்லாஹ் நம்பிக்கையைப் பதிய வைத்துத் தன் அருளைக் கொண்டும் இவர்களைப் பலப்படுத்தி வைத்திருக்கிறான். தொடர்ந்து நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும் சொர்க்கங்களிலும் இவர்களைப் புகுத்தி விடுவான். அதில் என்றென்றும் இவர்கள்*

*தங்கிவிடுவார்கள். இவர்களைப் பற்றி அல்லாஹ் திருப்தியடைவான். அவர்களும் அல்லாஹ்வைப் பற்றித் திருப்தியடைவார்கள். இவர்கள்தான் அல்லாஹ்வின் கூட்டத்தினர். நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர்தான் வெற்றி அடைந்தவர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.*

# நபி இப்றாஹீமுடைய மார்க்கம்

நபி இப்ராஹீம் a வழிகாட்டி விட்டுச் சென்ற மார்க்கம் “ஹனீஃபிய்யஹ்”. அதாவது அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டும். மார்க்கத்தையும், வழிபாட்டையும் அவனுக்கு மட்டுமே தூய்மையானதாக ஆக்கி வைக்க வேண்டும். இதற்குத்தான் அல்லாஹ் படைப்புகளைப் படைத்தான். இதுதான் அல்லாஹ்வின் கட்டளையும் ஆகும்.

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 51:56*

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ

***ஜின்களையும், மனிதர்களையும் (எனக்கு வழிப்பட்டு) என்னை (மட்டும்) வணங்குவதற்கன்றி (வேறெதற்காகவும்) நான் படைக்கவில்லை.***

- ***யஅபுதூன்*** *என்பதன் பொருள்* ***யுவஹ்ஹிதூன்.*** *அவர்கள் அவன் ஒருவனையே வணங்கவேண்டும்.*
- *அல்லாஹ்வின் கட்டளைகளில் மிகப்பெரியது தவ்ஹீது தான். தவ்ஹீது என்றால் வணக்க வழிபாடுகளை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே செய்வதாகும்.*
- *அல்லாஹ் தடுத்தவற்றில் மிகப் பெரியது இணை வைத்தல் - ஷிர்க். ஷிர்க் என்றால் அல்லாஹ்வுடன் மற்றவற்றையும் அழைப்பதாகும்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 4:36*

وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوْا بِهٖ شَيْـًٔا

***அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள்.***

# மூன்று அடிப்படைகள்

மனிதன் அறிந்துகொள்ள வேண்டிய மூன்று அடிப்படை விசயங்கள்.

1. அடியான் தனது ‘ரப்பு’ - இறைவனை அறிய வேண்டும்.

2. தனது மார்க்கத்தை அறிய வேண்டும்.

3. நபி முஹம்மது ﷺ அவர்களை அறிய வேண்டும்.

# முதல் அடிப்படை

*உன் 'ரப்பு' யார்? என்று உன்னிடம் கேட்கப்பட்டால் அதற்கு நீ சொல்:*

*என் 'ரப்பு' அல்லாஹ்.*

*அவன்தான் என்னைப் படைத்தான்.*

*எல்லாப் படைப்புகளையும் அவன்தான் படைத்தான்.*

*அவன்தான் வளர்க்கிறான்.*

*அவனே நான் வணங்கும் இறைவன்.*

*வணங்குவதற்குத் தகுதியானவன் அவனைத் தவிர வேறு எவரும் எனக்கு இல்லை.*

***ஆதாரம்:** அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 1:1*

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

**எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! (அவன்தான்) அகிலத்தார்களின் இறைவன் (படைத்து வளர்த்து பக்குவப்படுத்துபவன்).**

*உன் இறைவனை நீ எப்படி அறிந்தாய்? என்று உன்னிடம் கேட்கப்பட்டால் நீ சொல் :*

*நான் அவனை அவனுடைய அத்தாட்சிகள் மற்றும் அவனுடைய படைப்புகள் மூலம் அறிந்து கொண்டேன். அவனுடைய அத்தாட்சிகள், இரவு, பகல், சூரியன், சந்திரன்,*

*ஏழு வானங்கள், ஏழு பூமிகள் இன்னும் இவற்றில் உள்ள படைப்புகள் ஆகும்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 41:37*

وَمِنْ اٰيٰتِهِ الَّيْلُ وَالنَّهَارُ وَالشَّمْسُ وَالْقَمَرُ ؕ لَا تَسْجُدُوْا لِلشَّمْسِ وَلَا لِلْقَمَرِ وَاسْجُدُوْا لِلّٰهِ الَّذِىْ خَلَقَهُنَّ اِنْ كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ ﴿٣٧﴾

***இரவு, பகல், சூரியன், சந்திரன் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையே. மெய்யாகவே நீங்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்குபவர்களாக இருந்தால் நீங்கள் சூரியனுக்கும், சந்திரனுக்கும் தலை வணங்காதீர்கள். இவற்றைப் படைத்தவன் எவனோ அவனுக்கே சிரம் பணியுங்கள்.***

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 7:54*

اِنَّ رَبَّكُمُ اللّٰهُ الَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِىْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ ۚ يُغْشِى الَّيْلَ النَّهَارَ يَطْلُبُهٗ حَثِيْثًا ۙ وَّالشَّمْسَ وَالْقَمَرَ وَالنُّجُوْمَ مُسَخَّرٰتٍۢ بِاَمْرِهٖ ؕ اَلَا لَهُ الْخَلْقُ وَالْاَمْرُ ؕ تَبٰرَكَ اللّٰهُ رَبُّ الْعٰلَمِيْنَ ﴿٥٤﴾

*நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பிறகு அர்ஷின் மீது (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறு) உயர்ந்துவிட்டான். அவனே இரவால் பகலை மூடுகிறான்; (பகலால் இரவை மூடுகிறான்.) அது வெகு தீவிரமாகவே அதைப் பின்தொடர்கிறது. (அவனே) சூரியனையும். சந்திரனையும். நட்சத்திரங்களையும் (படைத்தான். இவை அனைத்தும்) அவனது கட்டளைக்கு உட்பட்டவையே. (படைத்தலும்) படைப்பினங்களும் (அதன்) ஆட்சியும் அவனுக்கு உரியன. அனைத்து உலகங்களையும் (படைத்து, வளர்த்து, பரிபக்குவப்படுத்தும்) இறைவனாகிய அல்லாஹ் மிக்க பாக்கியமுள்ளவன்.*

# ரப்பு

*"ரப்பு": அகிலங்களைப் படைத்தவன்தான் நாம் வணங்குவதற்குத் தகுதியானவன்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 2:21,22*

يَاَيُّهَا النَّاسُ اعْبُدُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ
قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ۙ﴿۲۱﴾ الَّذِىْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ فِرَاشًا
وَّالسَّمَآءَ بِنَآءً ۖ وَّاَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَخْرَجَ بِهٖ مِنَ الثَّمَرٰتِ
رِزْقًا لَّكُمْ ۚ فَلَا تَجْعَلُوْا لِلّٰهِ اَنْدَادًا وَّاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۲۲﴾

***மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் இறை அச்சமுள்ளவர்களாக ஆகலாம். அவனே பூமியை நீங்கள் வசிக்கும் இடமாகவும். வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து அதைக் கொண்டு (நீங்கள்) புசிக்கக்கூடிய கனிவர்க்கங்களையும் உங்களுக்கு வெளியாக்குகிறான். ஆகவே (இவற்றையெல்லாம்) நீங்கள் தெளிவாக அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு இணைகளை ஆக்காதீர்கள்.***

*இப்னு கஸீர்[3] (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "இந்தப் பொருட்களைப் படைத்தவன்தான் வணங்குவதற்குத் தகுதியானவன்."*

3. *இவர் பெயர் இஸ்மாயீல் இப்னு உமர் இப்னு கஸீர். திமிஷ்க் நகரத்தில் பிறந்த இவர் குறைஷி வமிசத்தைச் சேர்ந்தவர். குர்ஆன் விரிவுரை நூலும் வரலாற்று நூலும் எழுதி இருக்கிறார். இப்னு தைமிய்யாவின் மாணவர். இவர் ஹிஜ்ரீ 701 இல் பிறந்து, ஹிஜ்ரீ 774 இல் இறந்தார்.*

# வணக்க வழிபாடுகள்

*அல்லாஹ் கட்டளையிட்ட வணக்க வழிபாடுகளின் வகைகள் பல உள்ளன. உதாரணமாக இஸ்லாம், ஈமான், இஹ்ஸான், துஆ, கவ்ஃப், கஷ்யா, ரஜா, தவக்குல், ரஃகபா, ரஹபா, குஷூவு, இனாபா, இஸ்திஆனா, இஸ்திஆதா, இஸ்திஃகாஸா, தப்ஹு, நத்ரு, இன்னும் இவை போன்ற பல உள்ளன.*

*வணக்க வழிபாடுகள் அனைத்தையும் அல்லாஹ்விற்கு மட்டுமே செய்ய வேண்டும். இப்படித்தான் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.*

***ஆதாரம்:** அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 72:18*

وَّ اَنَّ الْمَسٰجِدَ لِلّٰهِ فَلَا تَدْعُوْا مَعَ اللّٰهِ اَحَدًا ﴿١٨﴾

***நிச்சயமாக பள்ளிவாசல் (மஸ்ஜிது)களெல்லாம், அல்லாஹ்வை வணங்குவதற்காக உள்ளன. ஆகவே, (அவற்றில்) அல்லாஹ்வுடன் மற்றெவரையும் (பெயர் கூறி) அழைக்காதீர்கள்.***

*வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் யாராவது எதையும் செய்தால் அவர் முஷ்ரிக்[4], காஃபிர்[5] ஆவார்.*

---

*4. முஷ்ரிக் : வணக்க வழிபாடுகளை அல்லாஹ் அல்லாதவருக்குச் செய்பவர்.*

*5. காஃபிர் : அல்லாஹ்வை ஏற்க மறுப்பவர். அல்லது அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டும் என்ற கொள்கையை மறுப்பவர்.*

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 23:117*

وَمَنْ يَّدْعُ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ ۙ لَا بُرْهَانَ لَهٗ بِهٖ ۙ فَاِنَّمَا حِسَابُهٗ عِنْدَ رَبِّهٖ ؕ اِنَّهٗ لَا يُفْلِحُ الْكٰفِرُوْنَ ۝١١٧

***(நபியே!) எவன் அல்லாஹ்வுடன் வேறு ஓர் இறைவனை அழைக்கிறானோ அவனிடத்தில் அதற்குரிய ஓர் அத்தாட்சியும் இல்லை. அவன் (பாவக்) கணக்கு அவன் இறைவனிடத்தில்தான் (தீர்க்கப்படும்). நிச்சயமாக (உண்மையை) நிராகரிப்பவர்கள் வெற்றி பெற மாட்டார்கள்.***

**துஆ (பிரார்த்தனை)** ஒரு வணக்கம்.

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 40:60*

وَقَالَ رَبُّكُمُ ادْعُوْنِيْۤ اَسْتَجِبْ لَكُمْ ؕ اِنَّ الَّذِيْنَ يَسْتَكْبِرُوْنَ عَنْ عِبَادَتِيْ سَيَدْخُلُوْنَ جَهَنَّمَ دٰخِرِيْنَ ۝٦٠

***உங்கள் இறைவன் கூறுகின்றான்: “நீங்கள் (உங்களுக்கு வேண்டியவை அனைத்தையும்) என்னிடமே கேளுங்கள். நான் உங்கள் பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொள்வேன். எவர்கள் என்னை வணங்காது பெருமை அடிக்கின்றனரோ, அவர்கள் நிச்சயமாக சிறுமைப்பட்டவர்களாக நரகம் புகுவார்கள்.***

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:*

## الدُّعَاءُ هُوَ الْعِبَادَةُ

***துஆவே வணக்கமாகும்.***

***பிறகு மேற்கூறப்பட்ட (40:60) வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள். (ஜாமிவுத் திர்மிதீ - 3503)***

**கவ்ஃப்[6] (பயப்படுதல்)** *ஒரு வணக்கம்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 3:175*

## فَلَا تَخَافُوْهُمْ وَخَافُوْنِ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿١٧٥﴾

***ஆகவே. நீங்கள் உண்மை நம்பிக்கையாளர்களாக இருந்தால் அவர்களுக்குப் பயப்பட வேண்டாம்; எனக்கே பயப்படுங்கள்.***

**கஷ்யா[7] (அஞ்சுதல்)** *ஒரு வணக்கம்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 2:150*

## فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِىْ

***நீங்கள் அவர்களுக்கு அஞ்சவேண்டாம்; எனக்கே அஞ்சுங்கள்.***

---

*6. தனக்கு ஏற்படும் ஆபத்தை எதிர்நோக்கும்போது, அல்லது நினைக்கும் போது உள்ளத்தில் ஏற்படும் தன்மைக்கு கவ்ஃப் - பயம் என்று சொல்லப்படும்.*

*7. ஒருவரின் கண்ணியம் மற்றும் முழுமையான ஆட்சி அதிகாரத்தை அறியும்போது அவரைப் பற்றி உள்ளத்தில் ஏற்படும் அச்சத்திற்கு கஷ்யா - அச்சம் என்று சொல்லப்படும்.*

**ரஜா (ஆதரவு வைத்தல்)** ஒரு வணக்கம்.

*ஆதாரம்:* அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 18:110

فَمَنْ كَانَ يَرْجُوْا لِقَآءَ رَبِّهٖ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَّلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهٖۤ اَحَدًا ﴿۱۱۰﴾

ஆகவே, எவர் தமது இறைவனைச் சந்திப்பதை ஆதரவு வைக்கிறாரோ அவர் நற்செயல்களைச் செய்யட்டும். மேலும் தமது இறைவனை வணங்குவதில் (அவனுடன்) வேறு எவரையும் சேர்த்து விட வேண்டாம்!

**தவக்குல் (சார்ந்து இருத்தல்)** ஒரு வணக்கம்.

*ஆதாரம்:* அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 5:23

وَعَلَى اللّٰهِ فَتَوَكَّلُوْۤا اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿۲۳﴾

நீங்கள் (உண்மை) நம்பிக்கையாளர்களாக இருந்தால் அல்லாஹ்வையே சார்ந்து இருங்கள்.

**ரங்பா, ரஹ்பா, ஃகுஷூவு (விரும்புதல், பயப்படுதல், உள்ளத்தால் பணிதல்)** இவையும் வணக்கங்களே.

*ஆதாரம்:* அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 21:90

اِنَّهُمْ كَانُوْا يُسٰرِعُوْنَ فِى الْخَيْرٰتِ وَيَدْعُوْنَنَا رَغَبًا وَّ رَهَبًا ؕ وَكَانُوْا لَنَا خٰشِعِيْنَ ﴿۹۰﴾

***நிச்சயமாக இவர்கள் அனைவரும் நன்மையான காரியங்களைச் செய்வதில் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டிருந்தார்கள். (நம் அருளை) விரும்பியும் (நம் தண்டனையைப்) பயந்தும் நம்மிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். இவர்கள் அனைவரும் உள்ளத்தால் நமக்குப் பணிந்தவர்களாக இருந்தார்கள்.***

**இனாபா[8] (திரும்புதல், மீளுதல்)** ஒரு வணக்கம்.

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 39:54*

وَاَنِيْبُوْٓا اِلٰى رَبِّكُمْ وَاَسْلِمُوْا لَهٗ

***நீங்கள் உங்கள் இறைவன் பக்கம் திரும்பி, அவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடங்கள்.***

**இஸ்திஆனா[9] (உதவி தேடுதல்)** ஒரு வணக்கம்.

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 1:5*

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٤

***(அல்லாஹ்வே!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம்.***

---

*8. அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவனுக்கு மாறு செய்வதை விட்டு விலகி, அவன் மீது நம்பிக்கையுடன் அவனிடமே திரும்புவதற்கு இனாபா என்று சொல்லப்படும்.*

*9. அல்லாஹ்விடம் ஓர் அடியான் தனது முழு பலவீனத்தையும் வெளிப்படுத்தி, தன் சகல காரியத்தையும் அவனிடமே ஒப்படைத்து அவனே போதுமானவன் என்ற உறுதியுடன் அல்லாஹ்விடம் உதவி தேடுவதற்கு இஸ்திஆனா என்று சொல்லப்படும்.*

**இஸ்திஆதா**[10] **(பாதுகாப்புக் கோருதல்)** ஒரு வணக்கம்.

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 113:1*

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِۙ ﴿۱﴾

***(நபியே! நீர் பிரார்த்தனை செய்து) கூறுவீராக! அதிகாலையின் இறைவனிடம், நான் பாதுகாப்பைக் கோருகிறேன்.***

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான்: அல்குர்ஆன் 114:1*

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِۙ ﴿۱﴾

***(நபியே! நீர் பிரார்த்தனை செய்து) கூறுவீராக! மக்களின் இறைவனிடம், நான் பாதுகாப்பைக் கோருகிறேன்.***

**இஸ்திகாஸா**[11] **(சிரமத்திலிருந்து காப்பாற்ற வேண்டுதல்)** ஒரு வணக்கம்.

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 8:9*

اِذْ تَسْتَغِيْثُوْنَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَـكُمْ

---

*10. அல்லாஹ்விடம் முழுமையான தேவையுடனும், பற்றுதலுடனும், அவனே போதுமானவன் எனும் நம்பிக்கையுடனும், அவனின் பாதுகாப்பு நிறைவானது எனும் உறுதியுடனும் ஒன்றின் தீங்கை விட்டுப் பாதுகாப்புத் தேடுவதற்கு 'இஸ்திஆதா' என்று சொல்லப்படும்.*

*11. ஆபத்து, அழிவு, கஷ்டம், துன்பம் ஆகியவற்றிலிருந்து காக்க வேண்டுவதற்கு 'இஸ்திகாஸா' என்று சொல்லப்படும்.*

*(உங்களைக்) காப்பாற்ற வேண்டுமாறு நீங்கள் உங்கள் இறைவனிடம் கோரியபோது அவன் உங்களுக்குப் பதிலளித்தான்.*

**தப்ஹு (அறுத்தல், பலியிடுதல்)** ஒரு வணக்கம்.

*ஆதாரம்: அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 6:162, 163*

قُلْ اِنَّ صَلَاتِىْ وَنُسُكِىْ وَمَحْيَاىَ وَمَمَاتِىْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَۙ ۝١٦٢
لَا شَرِيْكَ لَهٗ ۚ وَبِذٰلِكَ اُمِرْتُ وَاَنَا اَوَّلُ الْمُسْلِمِيْنَ ۝١٦٣

*நீர் கூறுவீராக! ‘‘நிச்சயமாக என் தொழுகையும், என் பலியும், என் வாழ்வும், என் மரணமும் (உலகத்தாரைப் படைத்து,வளர்த்துப்பரிபக்குவப்படுத்துகிற) இறைவனான அல்லாஹ்வுக்கே உரித்தானவை. அவனுக்கு எதுவும் இணையுமில்லை; (துணையுமில்லை.) இவ்வாறே நான் ஏவப்பட்டுள்ளேன். ஆகவே, அவனுக்கு வழிப்பட்டவர் களில் நான் முதன்மையானவன்’’ (என்றும் கூறுவீராக!)*

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 108:2*

فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ ۝٢

*உம் இறைவனுக்காக நீர் தொழுவீராக; மேலும் நீர் பலியிடுவீராக!*

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:*

لَعَنَ اللّٰهُ مَنْ ذَبَحَ لِغَيْرِ اللّٰهِ

***அல்லாஹ் அல்லாதவருக்குப் பலியிடுபவனை அல்லாஹ் சபிப்பானாக! (ஸஹீஹ் முஸ்லிம் - 4002)***

**நத்ரு[12] (நேர்ச்சை)** ஒரு வணக்கம்.

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 76:7*

يُوْفُوْنَ بِالنَّذْرِ

***இவர்கள் (நல்லவர்கள் தங்கள்) நேர்ச்சைகளையும் நிறைவேற்றி வைப்பார்கள்.***

---

*12. அல்லாஹ் நம் மீது கடமையாக்கியுள்ள வணக்கங்களைச் செய்ய நாம் ஆயத்தமாகுவதற்கு நத்ரு என்று சொல்லப்படும். மேலும் கடமையில்லாத ஒரு வணக்கத்தைத் தன் மீது கடமையாக்கிக் கொள்வதற்கும் 'நத்ரு' என்று சொல்லப்படும். இதை நபி ﷺ தடுத்துள்ளதாக ஸஹீஹ் புகாரியில் (6608) நபிமொழி வந்துள்ளது. அத்துடன் யாராவது ஒருவர் மீறி நேர்ச்சை செய்து விட்டால் அதை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று ஸஹீஹ் புகாரீயில் (6696) வந்துள்ள நபிமொழி அறிவிக்கிறது.*

# இரண்டாம் அடிப்படை

இஸ்லாமிய மார்க்கத்தை அதன் ஆதாரங்களுடன் அறிய வேண்டும். அதாவது, அல்லாஹ்விற்குக் கட்டுப்பட வேண்டும்; அவன் ஒருவனை மட்டும் வணங்குவது கொண்டு அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; அவனுக்குப் பணிந்து வழிப்பட வேண்டும்; இணைவைப்பை விட்டும் இணைவைப்போரை விட்டும் விலகிக்கொள்ள வேண்டும்.

மார்க்கத்தில் மூன்று தரங்கள் உள்ளன:

1. இஸ்லாம்

2. ஈமான்

3. இஸ்ஹான்

இஸ்லாம் ஐந்து தூண்களைக் கொண்டது.

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ شَهَادَةِ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللّٰهِ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَالْحَجِّ وَصَوْمِ رَمَضَانَ

1. ஷஹாதா (லாயிலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரசூலுல்லாஹ் - வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. மேலும், முஹம்மது ﷺ அல்லாஹ்வுடைய தூதர் என்று சாட்சி கூறுவது)

2. தொழுகையை நிலைநிறுத்துவது

3. ஸகாத் கொடுப்பது

4. கண்ணியத்திற்குரிய அல்லாஹ்வின் வீட்டைத் தரிசிப்பது

5. ரமழான் மாதம் நோன்பு நோற்பது.

(ஸஹீஹுல் புகாரீ-8)

**ஆதாரம்:** அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 3:18

شَهِدَ اللّٰهُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۙ وَالْمَلٰٓٮِٕكَةُ وَاُولُوا الْعِلْمِ

قَآٮِٕمًا ۢ بِالْقِسْطِ ؕ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ۝١٨

***(நபியே!) நீதவானாகிய அல்லாஹ் சாட்சி கூறுகிறான்: "நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியான இறைவன் வேறு யாரும் (இல்லவே) இல்லை." அவ்வாறே வானவர்களும் (வேதத்தை ஆராய்ந்த) கல்வி யாளர்களும் சாட்சி கூறுகின்றனர். (அனைவரையும்) மிகைத்தவனும் ஞானமுள்ளவனுமான அவனையன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை.***

**லாயிலாஹ இல்லல்லாஹ்'வின் பொருள்:** "லா மஅபூத பிஹக்கின் இல்லல்லாஹ்" உண்மையில் வணங்குவதற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர அறவே வேறு யாரும் இல்லை.

**லாயிலாஹ:** அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகின்ற அனைத்தையும் மறுப்பது.

***இல்லல்லாஹ்:*** *வணக்க வழிபாட்டை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டும் உரித்தாக்குவது. ஆட்சியில் அவனுக்கு இணை இல்லாதது போன்றே வணக்க வழிபாட்டிலும் அவனுக்கு இணை யாரும் இல்லை என்று உறுதி செய்வது.*

*இதற்கு விளக்கமாகப் பின்வரும் வசனங்கள் அமைந் துள்ளன. அல்குர்ஆன் 43:26, 27*

وَ اِذْ قَالَ اِبْرٰهِيْمُ لِاَبِيْهِ وَقَوْمِهٖۤ اِنَّنِىْ بَرَآءٌ

مِّمَّا تَعْبُدُوْنَ ﴿٢٦﴾ اِلَّا الَّذِىْ فَطَرَنِىْ فَاِنَّهٗ سَيَهْدِيْنِ ﴿٢٧﴾

***இப்ராஹீம் தன் தந்தையையும், மக்களையும் நோக்கிக் கூறியதை நினைத்துப் பாருங்கள். "நிச்சயமாக நான் நீங்கள் வணங்கும் தெய்வங்களை விட்டும் விலகிக் கொண்டேன். எனினும், எவன் என்னைப் படைத்தானோ (அவனையே நான் வணங்குவேன்.) நிச்சயமாக அவனே எனக்கு நேரான வழியை அறிவிப்பான். (என்றும் கூறினார்)"***

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 3:64*

قُلْ يٰۤاَهْلَ الْكِتٰبِ تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍۢ بَيْنَنَا وَ بَيْنَكُمْ

اَلَّا نَعْبُدَ اِلَّا اللّٰهَ وَ لَا نُشْرِكَ بِهٖ شَيْــًٔا وَّلَا يَتَّخِذَ بَعْضُنَا

بَعْضًا اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ ؕ فَاِنْ تَوَلَّوْا فَقُوْلُوا

اشْهَدُوْا بِاَنَّا مُسْلِمُوْنَ ﴿٦٤﴾

*(நபியே! அவர்களை நோக்கி) நீர் கூறுவீராக! ''வேதத்தை உடையவர்களே! நமக்கும் உங்களுக்கும் ஒரு சமத்துவ மான விசயத்தின் பக்கம் வருவீர்களாக! (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்க மாட்டோம். நாம் அவனுக்கு எதையும் இணையாக்க மாட்டோம். நம்மில் ஒருவரும் அல்லாஹ்வையன்றி எவரையும் கடவுளாக எடுத்துக்கொள்ள மாட்டோம்'' (என்று கூறுவீராக! நம்பிக்கையாளர்களே! இதையும்) அவர்கள் புறக்கணித்தால் (அவர்களை நோக்கி) ''நிச்சயமாக நாங்கள் (அவன் ஒருவனுக்கே) வழிப்பட்ட முஸ்லிம்கள் என்று நீங்கள் சாட்சி சொல்லுங்கள்!'' என்று நீங்கள் கூறி விடுங்கள்.*

## முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர்

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 48:29*

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ ؕ

***முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள்.***

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 9:128*

لَقَدْ جَآءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ
حَرِيْصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِيْنَ رَءُوْفٌ رَّحِيْمٌ ﴿١٢٨﴾

*(நம்பிக்கையாளர்களே! நம்) தூதர் ஒருவர் நிச்சயமாக உங்களிடம் வந்திருக்கிறார்; அவர் உங்களிலுள்ளவர்தான். (உங்களுக்கு ஒரு துன்பம் ஏற்பட்டு) நீங்கள் சிரமத்திற்கு*

***உள்ளாகிவிட்டால், அது அவருக்கு மிக்க வருத்தமாகவே இருக்கும். (அவ்வளவு தூரம் உங்கள் மீது அன்புடையவர்.) உங்கள் நன்மையையே பெரிதும் விரும்புகிறவராகவும், நம்பிக்கையாளர்(களாகிய உங்)கள் மீது மிக்க கருணையும் அன்பு உள்ளவராகவும் இருக்கிறார்.***

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 7:158*

قُلْ يَاَيُّهَا النَّاسُ اِنِّىْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا

***(நபியே!) நீர் கூறுவீராக! ''மனிதர்களே! (நீங்கள் எந்த நாட்டவர் ஆயினும் எவ்வகுப்பாராயினும்) நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் ஆவேன்.''***

*முஹம்மதுர் ரசூலுல்லாஹ்வின் கருத்து: அவர் கட்டளையிட்டவற்றில் அவருக்குக் கீழ்ப்படிவது; அவர் கூறியவற்றில் அவரை உண்மைப்படுத்துவது; அவர் தடுத்தவற்றிலிருந்து விலகுவது; அவர் கொண்டுவந்த வழிமுறை (ஷரீஆவின்படி) அல்லாஹ்வை வணங்குவது.*

**ஸலாத், ஸகாத்துக்குரிய** *ஆதாரம்: அல்குர்ஆன் 98:5*

وَمَآ اُمِرُوْٓا اِلَّا لِيَعْبُدُوا اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۙ۬ حُنَفَآءَ وَيُقِيْمُوا الصَّلٰوةَ وَيُؤْتُوا الزَّكٰوةَ وَذٰلِكَ دِيْنُ الْقَيِّمَةِ ۝٥

***இறைவனின் கலப்பற்ற மார்க்கத்தையே பின்பற்றி, மற்ற மார்க்கங்களைப் புறக்கணித்து, அல்லாஹ் ஒருவனையே வணங்கி, தொழுகையையும் கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்து வருமாறே தவிர, (வேறெதுவும் இத்தூதர்***

*மூலம்) அவர்களுக்கு ஏவப்படவில்லை. இதுதான் நிலையான சட்டங்களின் மார்க்கம்.*

**ஸவ்மு (நோன்பு)** *உடைய ஆதாரம்: அல்குர்ஆன் 2:183*

يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ
عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ۙ﴿۱۸۳﴾

*நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது. (அதனால்) நீங்கள் இறை அச்சமுள்ளவர்களாக ஆகலாம்.*

**ஹஜ்ஜு** *உடைய ஆதாரம்: அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 3:97*

وَلِلّٰهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيْلًا ؕ
وَمَنْ كَفَرَ فَاِنَّ اللّٰهَ غَنِىٌّ عَنِ الْعٰلَمِيْنَ ﴿۹۷﴾

*ஆகவே, எவர்கள் அங்கு பயணம் செல்ல சக்தி உள்ளவர்களாக இருக்கிறார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று) அந்த ஆலயத்தை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் உலகத்தாரை விட்டு தேவையற்றவனாக இருக்கின்றான்.*

# ஈமான்

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الْإِيمَانُ بِضْعٌ وَسَبْعُونَ أَوْ بِضْعٌ وَسِتُّونَ شُعْبَةً فَأَفْضَلُهَا قَوْلُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَدْنَاهَا إِمَاطَةُ الْأَذَى عَنِ الطَّرِيقِ وَالْحَيَاءُ شُعْبَةٌ مِّنَ الْإِيمَانِ

*ஈமான் எழுபதுக்கு அல்லது அறுபதுக்கும் மேற்பட்ட கிளைகள் உடையது. அவற்றில் மிக உயர்ந்தது லாயிலாஹ இல்லல்லாஹ். அவற்றில் மிகத் தாழ்ந்தது இடையூறு தருபவற்றைப் பாதையிலிருந்து அகற்றுவது. வெட்கம் ஈமானின் ஒரு பகுதி ஆகும். (ஸஹீஹ் முஸ்லிம் - 58)*

**ஈமானின் அடிப்படைகள் ஆறு:**

1. *அல்லாஹ்*[13],

2. *அவனுடைய மலக்குகள்*[14],

3. *அவனுடைய வேதங்கள்*[15],

4. *அவனுடைய தூதர்கள்*[16],

5. *மறுமை நாள், ஆகிய இவற்றை நம்புவது*[17],

6. *கதர் (விதி) அதில் உள்ள நல்லதையும் கெட்டதையும் நம்புவது.*[18]

**ஈமானின் முதல் ஐந்து அடிப்படைக்கு**

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 2:177*

لَيْسَ الْبِرَّ اَنْ تُوَلُّوْا وُجُوْهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَلٰكِنَّ الْبِرَّ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَالْمَلٰٓٮِٕكَةِ وَالْكِتٰبِ وَالنَّبِيّٖنَ‌ۚ

***மேற்கிலோ கிழக்கிலோ உங்கள் முகங்களை நீங்கள் திருப்பி விடுவதனால் மட்டும் நன்மை செய்தவர்களாக ஆகிவிட மாட்டீர்கள். (உங்களில்) எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் (மறுமை நாளையும்), வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும், நிச்சயமாக நம்பிக்கை கொள்கிறாரோ அவர்தான் நன்மையுடையவர்.***

---

*13) அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில் நான்கு விசயங்கள் உண்டு.*

- *அல்லாஹ்வின் உள்ளமையை நம்பிக்கை கொள்வது. அவன் இருக்கின்றான் என்று உறுதி கொள்வது.*
- *அவன்தான் ரப்பு - இறைவன் என்று நம்பிக்கை கொள்வது.*
- *அவன்தான் வணங்குவதற்குத் தகுதியானவன் என்று நம்பிக்கை கொள்வது.*
- *அவனுடைய பெயர்கள், பண்புகள் அனைத்தையும் நம்பிக்கை கொள்வது. அவனுடைய பெயர்கள், பண்புகளில் தஃவீல் - பொருள் மாற்றம் செய்யக்கூடாது. தஃதீல் - அவற்றுக்கு பொருள் இல்லை என்று கூறக்கூடாது. தக்யீஃப் - அவற்றை நமது அறிவுக் கேற்ப விவரிக்கக் கூடாது. தம்ஸீல் - அவற்றுக்கு உதாரணம் கூறக்கூடாது.*

***விதி உடைய ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 54:49*

إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَٰهُ بِقَدَرٍ ﴿٤٩﴾

***நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் குறிப்பான திட்டப்படியே படைத்திருக்கிறோம்.***

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 57:22*

مَآ أَصَابَ مِن مُّصِيبَةٍ فِى ٱلْأَرْضِ وَلَا فِىٓ أَنفُسِكُمْ
إِلَّا فِى كِتَٰبٍ مِّن قَبْلِ أَن نَّبْرَأَهَآ ۚ
إِنَّ ذَٰلِكَ عَلَى ٱللَّهِ يَسِيرٌ ﴿٢٢﴾

***(பொதுவாக) பூமியிலோ அல்லது (சொந்தமாக) உங்களுக்கோ ஏற்படக்கூடிய எந்தச் சிரமும், (நஷ்டமும்) அது ஏற்படுவதற்கு முன்னதாகவே (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை.நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதே!***

---

*14) வானவர்களை நம்பிக்கை கொள்வதில் நான்கு விசயங்கள் உள்ளன.*

- *வானவர்களின் உள்ளமையையும் அவர்கள் இருக்கின்றார்கள் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.*
- *அவர்களில் பெயர் கூறப்பட்டவர்களைப் பெயருடன் நம்பிக்கை கொள்ள வேண்டும்.*
- *அவர்களின் தன்மைகள் பற்றி நாம் அறிந்ததை நம்பிக்கை கொள்ள வேண்டும்.*
- *அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த பணிகளை நம்பிக்கை கொள்ள வேண்டும்.*

15) வேதங்களை நம்பிக்கை கொள்வதில் நான்கு விசயங்கள் உள்ளன.

- ❋ அவை அல்லாஹ்வின் புறத்திலிருந்து உண்மையாக இறக்கப் பட்டவை என நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- ❋ அவற்றில் பெயர் அறியப்பட்டவற்றைப் பெயர்களுடன் நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- ❋ அவற்றில் உள்ள செய்திகளை உண்மை என நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- ❋ அவற்றில் உள்ள கட்டளைகளைப் பின்பற்றி நடப்பதுடன் அவற்றை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

16) தூதர்களை நம்பிக்கை கொள்வதில் நான்கு விசயங்கள் உள்ளன.

- ❋ அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து தூதுத்துவம் கொடுக்கப் பட்டது உண்மை என நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர்களில் எவரையும் மறுக்கக் கூடாது.
- ❋ அவர்களில், பெயர் அறியப்பட்டவர்களைப் பெயருடன் நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- ❋ அவர்கள் கூறிய செய்திகள் உண்மை என நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- ❋ அவர்களில், நமக்கு அனுப்பப்பட்ட தூதரின் 'ஷரீஅத்' - மார்க்கத்தின்படி நடக்க வேண்டும்.

17) மறுமை நாளை நம்பிக்கை கொள்வதில் மூன்று விசயங்கள் உள்ளன.

- ❋ இரண்டாவது முறையாக சூர் ஊதப்படும்போது இறந்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.
- ❋ விசாரணை உண்டு. பிறகு தீர்ப்பும் கூலியும் கொடுக்கப்படும்.
- ❋ சொர்க்கம். நரகம் உண்டு என நம்பிக்கை கொள்ள வேண்டும்.

18) விதியை நம்பிக்கை கொள்வதில் நான்கு விசயங்கள் உள்ளன.

- ❋ அல்லாஹ் எல்லாவற்றையும் மொத்தமாகவும் விரிவாகவும் முன்கூட்டியே அறிந்திருக்கின்றான்.
- ❋ அதை அவன் தன்னிடம் உள்ள லவ்ஹுல் மஹ்ஃபூள் எனும் புத்தகத்தில் பதிவு செய்து விட்டான்.
- ❋ அல்லாஹ்வின் நாட்டம் இன்றி இவ்வுலகில் எதுவும் நடக்காது.
- ❋ இவ்வுலகில் நிகழக்கூடிய அனைத்தும் அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவையாகும். அல்லாஹ்தான் அனைத்தையும் படைப்பவன்.

# இஹ்சான்

**இஹ்சானில்** - ஓர் அம்சம் மட்டும் உள்ளது. நாம் அல்லாஹ்வைப் பார்ப்பதுபோன்று வணங்குவது, அல்லது அவன் நம்மைப் பார்க்கிறான் என்ற உறுதியில் வணங்குவது.

**ஆதாரம்:** அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 16:128

إِنَّ اللَّهَ مَعَ الَّذِينَ اتَّقَوا وَّالَّذِينَ هُم مُّحْسِنُونَ ﴿١٢٨﴾

**நிச்சயமாக எவர்கள் மெய்யாகவே இறை அச்சமுள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்களுடனும், எவர்கள் நன்மை செய்கிறார்களோ அவர்களுடனும்தான் அல்லாஹ் இருக்கிறான்.**

மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 26:217-220

وَتَوَكَّلْ عَلَى الْعَزِيزِ الرَّحِيمِ ﴿٢١٧﴾ الَّذِي يَرَاكَ حِينَ تَقُومُ ﴿٢١٨﴾
وَتَقَلُّبَكَ فِي السَّاجِدِينَ ﴿٢١٩﴾ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ﴿٢٢٠﴾

**(நபியே! அனைவரையும்) மிகைத்தவனும், அன்புடையவ(னுமாகிய என்)னிடமே நீர் (உமது காரியங்களை) ஒப்படைத்து விடுவீராக! நீர் (தனித்து) நின்று தொழுதாலும் அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து சிரம் பணிந்து வணங்கினாலும் உம்மை அவன் பார்க்கிறான். நிச்சயமாக அவன்தான் அனைத்தையும் செவியுறுபவன், நன்கு அறிந்தவன்.**

**ஈமான், இஸ்லாம், இஹ்ஸான்** இவற்றிற்கு நபி ﷺ அவர்கள் கூறிய ஹதீஸிலிருந்து ஆதாரம்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ قَالَ بَيْنَمَا نَحْنُ عِنْدَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ذَاتَ يَوْمٍ إِذْ طَلَعَ عَلَيْنَا رَجُلٌ شَدِيدُ بَيَاضِ الثِّيَابِ شَدِيدُ سَوَادِ الشَّعَرِ لا يُرَى عَلَيْهِ أَثَرُ السَّفَرِ وَلَا يَعْرِفُهُ مِنَّا أَحَدٌ حَتَّى جَلَسَ إِلَى النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَأَسْنَدَ رُكْبَتَيْهِ إِلَى رُكْبَتَيْهِ وَوَضَعَ كَفَّيْهِ عَلَى فَخِذَيْهِ وَقَالَ يَا مُحَمَّدُ أَخْبِرْنِي عَنْ الْإِسْلَامِ فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الْإِسْلَامُ أَنْ تَشْهَدَ أَنْ لَاإِلٰهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَتُقِيمَ الصَّلَاةَ وَتُؤْتِيَ الزَّكَاةَ وَتَصُومَ رَمَضَانَ وَتَحُجَّ الْبَيْتَ إِنْ اسْتَطَعْتَ إِلَيْهِ سَبِيلًا قَالَ صَدَقْتَ قَالَ فَعَجِبْنَا لَهُ يَسْأَلُهُ وَيُصَدِّقُهُ قَالَ فَأَخْبِرْنِي عَنْ الْإِيمَانِ قَالَ أَنْ تُؤْمِنَ

بِاللّٰهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ وَالْيَوْمِ الْآخِرِ وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ قَالَ صَدَقْتَ قَالَ فَأَخْبِرْنِي عَنْ الْإِحْسَانِ قَالَ أَنْ تَعْبُدَ اللّٰهَ كَأَنَّكَ تَرَاهُ فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ قَالَ فَأَخْبِرْنِي عَنْ السَّاعَةِ قَالَ مَا الْمَسْئُولُ عَنْهَا بِأَعْلَمَ مِنْ السَّائِلِ قَالَ فَأَخْبِرْنِي عَنْ أَمَارَتِهَا قَالَ أَنْ تَلِدَ الْأَمَةُ رَبَّتَهَا وَأَنْ تَرَى الْحُفَاةَ الْعُرَاةَ الْعَالَةَ رِعَاءَ الشَّاءِ يَتَطَاوَلُونَ فِي الْبُنْيَانِ قَالَ ثُمَّ انْطَلَقَ فَلَبِثْتُ مَلِيًّا ثُمَّ قَالَ لِي يَا عُمَرُ أَتَدْرِي مَنْ السَّائِلُ قُلْتُ اللّٰهُ وَرَسُولُهُ أَعْلَمُ قَالَ فَإِنَّهُ جِبْرِيلُ أَتَاكُمْ يُعَلِّمُكُمْ دِينَكُمْ

*நாங்கள் ஒருநாள் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் அருகில் இருந்தபோது தூய வெண்ணிற ஆடை அணிந்த, அடர் கறுப்பு நிறத்தில் தலைமுடியுடன் ஒரு மனிதர் வந்தார். பயணத்தில் வந்த எந்த அடையாளமும் அவரிடம் காணப்படவில்லை; எங்களில் எவருக்கும் அவரை (யார் என)த் தெரியவில்லை. அவர் நபி ﷺ அவர்களின் அருகில் (சென்று), தம் முழங்கால்களை*

நபி ﷺ அவர்களின் முழங்கால்களோடு இணைத்துக் கொண்டு (நெருக்கமாக) அமர்ந்தார். அவர் தம் கைகளைத் தம் தொடைகள் மீது வைத்(து அமர்ந்)தார். பிறகு ‘‘முஹம்மதே! இஸ்லாம் என்றால் என்னவென்று எனக்குத் தெரிவியுங்கள்’’ என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள், ‘‘இஸ்லாம் என்பது, வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது (ஆகிய நான்) அல்லாஹ்வின் தூதர் என்றும் நீங்கள் உறுதி கூறுவதாகும். மேலும், தொழுகையைக் கடைப்பிடிப்பதும், ஸகாத்தை வழங்கிவருவதும்,ரமழான் மாதத்தில்நோன்புநோற்பதும், சென்றுவர இயன்றால் இறையில்லம் கஅபாவில் ஹஜ் செய்வதுமாகும்’’ என்று பதிலளித்தார்கள். அதற்கு அந்த மனிதர் ‘‘நீர் உண்மையைக் கூறினீர்’’ என்றார்.

அவர் இவ்வாறு கூறியதைக் கேட்டு, அவரே கேள்வியும் கேட்டுவிட்டு அவரே நபி ﷺ அவர்கள் அளித்த பதிலை உறுதிப்படுத்தவும் செய்கிறாரே என்று நாங்கள் வியப்படைந்தோம்.

அடுத்து அவர், ‘‘ஈமான் பற்றி எனக்குத் தெரிவியுங்கள்’’ என்று கூறினார். அதற்கு நபி ﷺ அவர்கள், ‘‘அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும், வேதங்களையும், தூதர்களையும், இறுதி நாளையும் நீங்கள் நம்புவதாகும்; நன்மை, தீமை அனைத்தும் விதியின்படியே நடக்கின்றன என்றும் நீங்கள் நம்புவதாகும்’’ என்று கூறினார்கள். அதற்கும் அம்மனிதர் ‘‘நீர் உண்மையைக் கூறினீர்’’ என்றார். அடுத்து அம் மனிதர், ‘‘இஹ்ஸான் பற்றி எனக்குத் தெரிவியுங்கள்’’

*என்றார். அதற்கு நபி ﷺ அவர்கள், ‘‘அல்லாஹ்வை நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வுடன் வழிபடுவதாகும். ஏனெனில், அவனை நீங்கள் பார்க்கவில்லை என்றாலும், அவன் உங்களைப் பார்க்கிறான்’’ என்று பதிலளித்தார்கள். அம்மனிதர், ‘‘மறுமை நாளைப் பற்றி எனக்குத் தெரிவியுங்கள்’’ என்று கேட்க, நபி ﷺ அவர்கள், கேள்வி கேட்கப்படுபவர், கேட்பவரைவிட அதிகம் அறிந்தவர் அல்லர்’’ என்று கூறினார்கள். அம்மனிதர், ‘‘மறுமை நாளின் அடையாளங்களைப் பற்றி எனக்குத் தெரிவியுங்கள்’’ என்று கேட்டார். அதற்கு நபி ﷺ அவர்கள், ‘‘ஓர் அடிமைப் பெண் தன் எஜமானியைப் பெற்றெடுப்பதும், காலில் செருப்பில்லாத, அரைகுறை ஆடைகளை அணிந்துள்ள ஏழைகளான ஆட்டு இடையர்கள் போட்டி போட்டுக்கொண்டு உயரமான கட்டடங்கள் கட்டுவதை நீங்கள் காண்பதுமாகும்’’ என்று கூறினார்கள்.*

*பிறகு அம்மனிதர் சென்றுவிட்டார். நீண்ட நேரம் நான் (அங்கேயே) இருந்தேன். பின்னர், என்னிடம் நபி ﷺ அவர்கள், ‘‘உமரே! கேள்வி கேட்ட அந்த நபர் யார் என்று உமக்குத் தெரியுமா?’’ என்று கேட்டார்கள். நான், ‘‘அல்லாஹ்வும் அவன் தூதருமே நன்கு அறிந்தவர்கள்’’ என்று சொன்னேன். நபி ﷺ அவர்கள், ‘‘அவர்தான் (மலக்குகளின் தலைவர்) ஜிப்ரீல். உங்களுக்கு உங்களின் மார்க்கத்தைக் கற்றுத் தருவதற்காக உங்களிடம் அவர் வந்தார்’’ என்று சொன்னார்கள்.*

# மூன்றாவது அடிப்படை

மூன்றாவது அடிப்படை நபி முஹம்மது ﷺ அவர்களை அறிவதாகும். அவர்களுடைய தந்தை அப்துல்லாஹ். பாட்டனார் அப்துல் முத்தலிப். முப்பாட்டனார் ஹாஷிம்.

ஹாஷிம், குறைஷி வமிசத்தைச் சேர்ந்தவர். குறைஷ், அரபு குலத்தைச் சேர்ந்தவர்கள். அரபியர்கள் நபி இஸ்மாயீல் உடைய வழித்தோன்றல்கள். இஸ்மாயீல், நபி இப்றாஹீ முடைய மகன் ஆவார். (அவர்கள் மீது அல்லாஹ்வின் ஈடேற்றமும் சிறப்புக் கருணையும் உண்டாகட்டும்.)

முஹம்மது நபி ﷺ அவர்களின் வயது மொத்தம் 63 ஆகும். அதில் நபித்துவத்திற்கு முன் 40 வருடங்கள். நபியாகவும் ரசூலாகவும் 23 வருடங்கள்.

“இக்ரஃ” (96:1) என்ற இறைவசனம் இறங்கியபோது நபியாக ஆக்கப்பட்டார்கள். “யா அய்யுஹல் முத்தஸிர்” (74:1-5) இறக்கப்பட்டபோது ரசூலாக ஆக்கப்பட்டார்கள். அவர்கள் பிறந்த ஊர் மக்கா. ஹிஜ்ரா சென்று தங்கிய ஊர் மதீனா.

தவ்ஹீதின் பக்கம் மக்களை அழைப்பதற்கும் ஷிர்க்கிலிருந்து எச்சரிப்பதற்கும் அல்லாஹ் அவர்களை தூதராக அனுப்பினான்.

**ஆதாரம்:** அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 74:1-5

يَٰٓأَيُّهَا ٱلْمُدَّثِّرُ ۝١ قُمْ فَأَنذِرْ ۝٢ وَرَبَّكَ فَكَبِّرْ ۝٣

وَثِيَابَكَ فَطَهِّرْ ۝٤ وَالرُّجْزَ فَاهْجُرْ ۝٥

***"(வஹ்யின் அதிர்ச்சியால்) போர்வை போர்த்திக் கொண்டிருக்கும் (நபியே!) நீர் எழுந்து நின்று, அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! உம் இறைவனைப் பெருமைப்படுத்துவீராக! உம் ஆடையைப் பரிசுத்தமாக்கி வைப்பீராக! அசுத்தங்களை வெறுத்து விடுவீராக!***

***கும் ஃபஅன்திர்:*** *ஷிர்க்கை விட்டு எச்சரித்து தவ்ஹீதின் பக்கம் அழையுங்கள்.*

***வரப்பக ஃபகப்பிர்:*** *தவ்ஹீதைக் கொண்டும் அவன் ஒருவனை மட்டும் வணங்குவது கொண்டும் அவனைக் கண்ணியப்படுத்துங்கள்.*

***வஸியாபக்க ஃபதஹ்ஹிர்:*** *உங்கள் செயல்களை ஷிர்க்கை விட்டும் சுத்தப்படுத்துங்கள்.*

***வர்ருஜ்ஸ ஃபஹ்ஜுர்:*** *ருஜ்ஸ் என்றால் சிலைகள். ஃபஹ்ஜுர் என்றால் அவற்றை விட்டும், அவற்றை வணங்குபவர்களை விட்டும் விலகி இருங்கள்.*

*நபி ﷺ அவர்கள் 10 ஆண்டுகள் தவ்ஹீதின் பக்கம் அழைத்தார்கள். அதற்குப் பிறகு மிஃராஜ் பயணம் சென்றார்கள். அங்கு அவர்களுக்கு ஐந்து நேரத் தொழுகைகள் கடமையாக்கப்பட்டன. மக்காவில் மூன்று ஆண்டுகள் தொழுதார்கள். பிறகு மதீனாவிற்கு ஹிஜ்ரா செல்ல அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது.*

*ஹிஜ்ரா என்றால் ஷிர்க் வைக்கப்படுகிற ஊரிலிருந்து இஸ்லாமிய ஊருக்கு இடம் பெயர்வதாகும். இது இந்த*

*உம்மத்தின் மீது கடமையாகும். மறுமை நாள் வரை இது நீடிக்கும்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 4:97*

إِنَّ الَّذِينَ تَوَفَّاهُمُ الْمَلَائِكَةُ ظَالِمِي أَنفُسِهِمْ قَالُوا
فِيمَ كُنتُمْ ۖ قَالُوا كُنَّا مُسْتَضْعَفِينَ فِي الْأَرْضِ ۚ
قَالُوا أَلَمْ تَكُنْ أَرْضُ اللَّهِ وَاسِعَةً فَتُهَاجِرُوا فِيهَا ۚ
فَأُولَٰئِكَ مَأْوَاهُمْ جَهَنَّمُ ۖ وَسَاءَتْ مَصِيرًا ﴿٩٧﴾

***எவர்கள் (துங்கள் மார்க்கக் கட்டளையைச் சரிவர நிறைவேற்ற முடியாமல் நிராகரிப்பவர்களின் நாட்டில் இருந்து கொண்டு) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனரோ அவர்களின் உயிரை மலக்குகள் கைப்பற்றும் பொழுது (அவர்களை நோக்கி ''மார்க்கக் கட்டளையை நிறைவேற்றாது) நீங்கள் எவ்வாறு இருந்தீர்கள்?'' என்று கேட்பார்கள். அ(தற்க)வர்கள் ''அந்தப் பூமியில் நாங்கள் சிறுபான்மையினர்களாகவே இருந்தோம்'' என்று (பதில்) கூறுவார்கள். (அதற்கு மலக் குகள்) அல்லாஹ்வுடைய பூமி விசாலமானதல்லவா? நீங்கள் (இருந்த) அவ்விடத்தை விட்டு வெளியேறி இருக்க வேண்டாமா?'' என்று கேட்பார்கள். இத்தகையவர்கள் ஒதுங்குமிடம் நரகம்தான். அது ஒதுங்கும் இடங்களில் மிகக் கெட்டது!***

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 29:56*

يٰعِبَادِىَ الَّذِيۡنَ اٰمَنُوۡۤا اِنَّ اَرۡضِىۡ وَاسِعَةٌ فَاِيَّاىَ فَاعۡبُدُوۡنِ ﴿۵۶﴾

***நம்பிக்கை கொண்ட என் அடியார்களே! நிச்சயமாக என் பூமி மிக்க விசாலமானது. அதில் நீங்கள் (எங்குச் சென்றபோதிலும்) என்னையே வணங்குங்கள். (மற்றெ வரையும் வணங்காதீர்கள்.)***

*இமாம் பகவி (بغوي) கூறுகிறார்கள்: "ஹிஜ்ரா செல்லாமல் மக்காவில் தங்கிவிட்ட முஸ்லிம்கள் விசயத்தில் இந்த வசனம் இறங்கியது."*

*நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

**عَنْ مُعَاوِيَةَ قَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ لَا تَنْقَطِعُ الْهِجْرَةُ حَتّٰى تَنْقَطِعَ التَّوْبَةُ وَلَا تَنْقَطِعُ التَّوْبَةُ حَتَّى تَطْلُعَ الشَّمْسُ مِنْ مَغْرِبِهَا**

*"தவ்பா[19] முடியும் வரை ஹிஜ்ரா முடியாது. சூரியன் மேற்கிலிருந்து உதிக்கும் வரை தவ்பா முடியாது."*

*(சுனன் அபூதாவூது - 2473)*

*19) தவ்பா: ஒருவர் தான் செய்த பாவத்தை நினைத்து வருந்தி, அதிலிருந்து விலகி, இனி அந்தப் பாவத்தின் பக்கம் செல்லமாட்டேன் என்ற உறுதியோடு அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுவதை தவ்பா என்று கூறப்படும்.*

# நபி ﷺ மதீனாவில்

மதீனாவில் நபி ﷺ அவர்கள் தங்கியபோது இஸ்லாமின் ஏனைய சட்டங்களை மக்களுக்கு ஏவினார்கள். (உதாரணமாக : ஸகாத், ஸவ்மு, ஹஜ், ஜிஹாது, அதான், தொழுகைக்கு அழைப்பது, நன்மையை ஏவுவது, தீமையைத் தடுப்பது, இன்னும் இதுபோன்ற பல சட்டங்கள்.)

இந்த வழியில் நபி ﷺ அவர்கள் பத்து ஆண்டுகள் வாழ்ந்தார்கள். அவர்களின் மார்க்கம் நிலையானது. நமக்கு மத்தியில் அந்த மார்க்கம் இன்றும் நிலைத்துள்ளது.

நன்மைகள் அனைத்தையும் சமுதாயத்திற்கு அறிவித்து விட்டார்கள். தீமைகள் அனைத்தையும் விட்டு சமுதாயத்தை எச்சரித்தார்கள்.

அவர்கள் அறிவித்த நன்மையாவது தவ்ஹீது மற்றும் அல்லாஹ் விரும்புகின்ற, அனைத்துச் செயல்களும் ஆகும்.

அவர்கள் எச்சரித்த தீமையாவது இணைவைத்தலும், அல்லாஹ் வெறுக்கின்ற அனைத்துக் காரியங்களும் ஆகும்.

அல்லாஹ், மக்கள் அனைவருக்கும் அவரைத் தூதராக அனுப்பினான். ஜின்களும், மனிதர்களும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை அல்லாஹ் கடமையாக்கினான்.

**ஆதாரம்:** அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 7:158

قُلْ يَاَيُّهَا النَّاسُ اِنِّىْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا

***(நபியே!) கூறுவீராக! ‘‘மனிதர்களே! (நீங்கள் எந்த***

**நாட்டவர் ஆயினும் எவ்வகுப்பாராயினும்) நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்றவினால் அனுப் பப்பட்ட தூதர் ஆவேன்."**

*அல்லாஹ்ற, அவர்கள் மூலம் இந்த மார்க்கத்தை முழுமைப் படுத்தினான்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ்ற கூறுகின்றான். அல்குர்ஆன் 5:3*

ٱلْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِى
وَرَضِيتُ لَكُمُ ٱلْإِسْلَٰمَ دِينًا ۚ

**இன்றைய தினம் நான் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து, என் அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்து விட்டேன். உங்களுக்காக இந்த இஸ்லாமை மார்க்கமாக அங்கீகரித்துக் கொண்டேன்.**

- *நபி ﷺ அவர்கள் 63ம் வயதில் இறந்து விட்டார்கள்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ்ற கூறுகின்றான். அல்குர்ஆன் 39:30*

إِنَّكَ مَيِّتٌ وَإِنَّهُم مَّيِّتُونَ ﴿٣٠﴾

**(நபியே!) நிச்சயமாக நீங்களும் இறந்து விடக்கூடியவரே. நிச்சயமாக அவர்களும் இறந்துவிடக்கூடியவர்கள்தான்.**

- *மக்கள் இறந்தபின் மீண்டும் எழுப்பப்படுவார்கள்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ்ற கூறுகின்றான். அல்குர்ஆன் 20:55*

مِنْهَا خَلَقْنٰكُمْ وَفِيْهَا نُعِيْدُكُمْ وَمِنْهَا نُخْرِجُكُمْ
تَارَةً اُخْرٰى ﴿٥٥﴾

**பூமியிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம். பின்னர், அதிலேயே நாம் உங்களைச் சேர்த்துவிடுவோம். மற்றொரு தடவையும் (உங்களுக்கு உயிர் கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுத்துவோம்.**

*மேலும், அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 71:17-18*

وَاللّٰهُ اَنْۢبَتَكُمْ مِّنَ الْاَرْضِ نَبَاتًا ﴿١٧﴾ ثُمَّ يُعِيْدُكُمْ فِيْهَا
وَيُخْرِجُكُمْ اِخْرَاجًا ﴿١٨﴾

**அல்லாஹ்வே உங்களை (ஒரு செடியைப் போல்) பூமியில் வளரச் செய்தான் (வெளிப்படுத்தினான்). பின்னர், அதில் தான் உங்களை (மரணிக்க வைத்து, அதில்) சேர்த்து விடுவான். (அதிலிருந்தே) மற்றொரு முறையும் உங்களை வெளிப்படுத்துவான்.**

● *மறுமையில் எழுப்பப்பட்ட பிறகு விசாரிக்கப்படுவார்கள். தங்களின் செயல்களுக்கு ஏற்ப கூலி கொடுக்கப்படுவார்கள்.*

**ஆதாரம்:** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 53:31*

لِيَجْزِيَ الَّذِيْنَ اَسَآءُوْا بِمَا عَمِلُوْا وَيَجْزِيَ الَّذِيْنَ
اَحْسَنُوْا بِالْحُسْنٰى ﴿٣١﴾

***ஆகவே, தீமை செய்தவர்களுக்கு அவர்களின் (தீய) செயலுக்குத் தக்கவாறு (தீமையைக்) கூலியாகக் கொடுக்கிறான். நன்மை செய்தவர்களுக்கு நன்மையைக் கூலியாகக் கொடுக்கிறான்.***

● *மறுமையில் மீண்டும் எழுப்பப்படுவதை பொய் என்று கூறுபவர் “காஃபிர்.” ஆவார்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 64:7*

زَعَمَ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنْ لَّنْ يُّبْعَثُوْا ؕ قُلْ بَلٰى وَرَبِّىْ لَتُبْعَثُنَّ ثُمَّ لَتُنَبَّؤُنَّ بِمَا عَمِلْتُمْ ؕ وَذٰلِكَ عَلَى اللّٰهِ يَسِيْرٌ ﴿۷﴾

***(மரணித்த பின்னர் உயிர் கொடுத்து) எழுப்பப்பட மாட்டோம் என்று நிச்சயமாக நிராகரிப்பவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். (நபியே!) நீர் கூறுவீராக! “அவ்வாறல்ல. என் இறைவன் மீது சத்தியமாக! மெய்யாகவே நீங்கள் எழுப்பப்படுவீர்கள். நீங்கள் செய்து கொண்டிருப்பவற்றைப் பற்றி பின்னர் நீங்கள் அறிவுறுத்தவும் படுவீர்கள். இவ்வாறு செய்வது அல்லாஹ்விற்கு மிக்க எளிதாகும்.”***

# இறைத்தூதர்கள்

● *அல்லாஹ் இறைத்தூதர்களை மக்களுக்கு நற்செய்தி கூறுபவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் களாகவும் அனுப்பினான்.*

**ஆதாரம்:** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 4:165*

رُسُلًا مُّبَشِّرِيْنَ وَ مُنْذِرِيْنَ لِئَلَّا يَكُوْنَ لِلنَّاسِ عَلَى اللّٰهِ
حُجَّةٌ بَعْدَ الرُّسُلِ ؕ وَكَانَ اللّٰهُ عَزِيْزًا حَكِيْمًا ﴿۱۶۵﴾

***அல்லாஹ்வின் மீது (குற்றம் கூற) மனிதர்களுக்கு ஓர் ஆதாரமும் இல்லாதிருக்க இத்தூதர்களுக்குப் பின்னரும் (யஹ்யா போன்ற வேறு) பல தூதர்களை (சொர்க்கத்தைக் கொண்டு) நற்செய்தி கூறுகிறவர்களாகவும், (நரகத்தைக் கொண்டு) அச்சமூட்டி எச்சரிக்கிறவர்களாகவும் (நாம் அனுப்பி வைத்தோம்.) அல்லாஹ் (அனைவரையும்) மிகைத்தவனும், ஞானமுள்ளவனாகவும் இருக்கிறான்.***

● *முதல் தூதர் நூஹ், இறுதித் தூதர் முஹம்மது ﷺ.*

**ஆதாரம்:** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 4:163*

اِنَّاۤ اَوْحَيْنَاۤ اِلَيْكَ كَمَاۤ اَوْحَيْنَاۤ اِلٰى نُوْحٍ وَّالنَّبِيّٖنَ مِنْۢ بَعْدِهٖ ۚ

***(நபியே!) நூஹுக்கும், அவருக்குப் பின்னர் வந்த***

**நபிமார்களுக்கும் நாம் வஹ்யி அறிவித்தவாறே உங்களுக்கும் நிச்சயமாக நாம் வஹ்யி அறிவித்தோம்.**

● எல்லா சமுதாயத்தவர்களுக்கும் அல்லாஹ் தூதர்களை அனுப்பியுள்ளான். நூஹ் a அவர்களிலிருந்து முஹம்மது ﷺ அவர்கள் வரை வந்து சென்றுள்ளார்கள்.

அனைத்துத் தூதர்களும் அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும் என்று மக்களுக்குக் கட்டளையிட்டார்கள். தாகூத்தை வணங்குவதை விட்டும் தடுத்தார்கள்.

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 16:36*

وَلَقَدْ بَعَثْنَا فِىْ كُلِّ اُمَّةٍ رَّسُوْلًا اَنِ اعْبُدُوا اللّٰهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَ‌ ۚ

***(பூமியின் பல பாகங்களிலும் வசித்திருந்த) ஒவ்வொரு வகுப்பினருக்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பியிருக்கிறோம். (அத்தூதர்கள் அவர்களை நோக்கி) "அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். (வழி கெடுக்கும்) ஷைத்தான்களிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் என்(று கூறிச் சென்)றார்கள்."***

*தாகூத்தை நிராகரிப்பதையும் அல்லாஹ்வை மட்டும் நம்பிக்கை கொள்வதையும் எல்லா அடியார்களுக்கும் அல்லாஹ் கடமையாக்கினான்.*

***ஆதாரம்:*** *அல்லாஹ் கூறுகின்றான். அல்குர்ஆன் 2:256*

فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى لَا انْفِصَامَ لَهَا

**எவர் தாகூத்தை நிராகரித்துவிட்டு, அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கிறாரோ, அவர் நிச்சயமாக அறுபடாத பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டார்.**

*தாகூத்தை நிராகரிப்பதும், அல்லாஹ்வை மட்டும் நம்பிக்கை கொள்வதும்தான் 'லாயிலாஹ இல்லல்லாஹ்'வின் பொருளாகும்.*

*இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகிறார்கள்: "அடியான் தனது வரம்பை மீறக் காரணமாக அமைந்த, பொய்தெய்வம், தலைவர், அதிகாரி இவற்றிற்கு தாகூத் என்று சொல்லப்படும்."*

*தாகூத்துகள் பலர் இருக்கின்றனர். அவர்களில் ஐந்து வகையினர் முக்கியமானவர்கள்.*

*1. இப்லீஸ்.*

*2. தான் வணங்கப்படுவதை விரும்பக்கூடியவன்.*

*3. தன்னை வணங்கக் கூறுபவன்.*

*4. மறைவானது தனக்குத் தெரியும் என்று கூறுபவன்.*

*5. அல்லாஹ்வின் சட்டப்படி தீர்ப்பளிக்காதவன்.*

*அல்லாஹ்வே மிக அறிந்தவன்.*